# மாகாணக்கல்வித்திணைக்களம்
# வடமாகாணம்
# க.பொ.த (உ/த) பரீட்சை - 2020
# பயிற்சிப் பரீட்சை வினாத்தாள்
# பரதநாட்டியம் I (53T I)
# நேரம் - 2மணி

பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

**1.கீர்த்தனைகளில் பாடல் வரிகளுக்கு பொருத்தமான கதையை அபிநயித்துக் காட்டுவது**

1.பாவம் 2.விபாவம் 3.சஞ்சாரிபாவம்

4.அனுபாவம் 5.வியபிசாரிபாவம்

**(…..3…..)**

- பாவம் -உள்ளத்தில் தோன்றும் உணர்ச்சிகளை வெளிப்படுத்துவது
- விபாவம் -ரஸத்தை தோற்றுவிப்பதற்குக் காரணமாய் அமைந்தது.
- அனுபாவம் -ரஸம் தோன்றிய பின் வெளிப்படும் நடை,உடை பாவனை
- வியபிசாரிபாவம்- ரஸ உற்பத்திக்கான துணைஉணர்ச்சிகள், நிலையற்றவை, தோன்றி மறையும்.
- ஸ்தாயிபாவம்- ரஸவெளிப்பாட்டில் தொடக்கம் முதல் இறுதிவரை நிலைத்து நிற்கும் பாவம்

பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

**2. முகப்பூச்சு,ஒப்பனை செய்தலைக் குறிக்கும் ஆஹார்ய அபிநயப்பிரிவு**

1.விபசாரி 2.புஸ்டம் 3.அலங்காரம் 4.அங்கரச்சணம் 5.சஞ்சீவம்

**(⋯.4⋯)**

- விபசாரி –அந்தந்த நாட்டுச்சபையோர் ஏற்றுக்கொள்ளும்படியான ஆடை,அணிகலன்கள் அணிவது.
- புஸ்டம் - மாதிரி உருவங்களால் அரங்கை அலங்கரிப்பது (அரண்மனை,மலைகள்,மரங்கள்)
- அலங்காரம்- ஆடை,அணிகலன்கள்,மலர்கள்,மாலைகளால் அலங்கரித்தல்
- அங்கரச்சணம்- ஒப்பனை,முகப்பூச்சு வர்ணம் பூசுதல்
- சஞ்சீவம் - உயிருள்ள உயிரினங்களைப் பயன்படுத்தி நடித்தல்

பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

3. **தீங்கிணதொம் - தகிடததிங்கிணதொம் இதில் இடம்பெறும் ஜாதிகள்**

1.கண்டம்,சதுஸ்ரம் 2.மிஸ்ரம்,கண்டம் 3.மிஸ்ரம்,சதுஸ்ரம்

4.திஸ்ரம்,சங்கீர்ணம் 5.மிஸ்ரம்,சங்கீர்ணம்

**(⋯1..)**

- ததிங்கிணதொம் -5 கண்டம்
- ததீங்கிணதொம் -6 திஸ்ரம்
- தாதீங்கிணதொம்/தகததிங்கிணதொம் -7 மிஸ்ரம்
- ததீங்கீணாதொம்/தகிடததிங்கிணதொம் -8 சதுஸ்ரம்
- தாதீங்கீணாதொம்/தகதிகுததிங்கிணதொம் -9 சங்கீர்ணம்

பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

**4. பாரதியார் கண்ணன் மேல் கொண்ட பக்தி**

1.லாவண்யபக்தி 2.மாதுரியபக்தி 3.மூர்க்கபக்தி

4.சாக்கியபக்தி 5.வாத்சல்யபக்தி

(..4···)

- லாவண்யபக்தி - இறைவனை அலங்கரித்து அதனூடாக அன்பு செய்தல் (கண்ணன்-ஆண்டாள்)
- மாதுரியபக்தி – நாயகியாக நினைந்து அன்பு செய்தல் (கண்ணன்-மீரா)
- மூர்க்கபக்தி - இறைவன் மீது கொண்ட முரட்டுத்தனமான பக்தி (சிவன்-கண்ணப்பர்)
- சாக்கியபக்தி - தோழனாக நினைந்து பக்தி செலுத்தல் (பாரதியார் கண்ணன்)
- வாத்சல்யபக்தி – குழந்தையாக அன்பு செய்தல் (யசோதை-கண்ணன்)

பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

**5. அட்சரஎண்ணிக்கை 12 ஆகவுள்ள தாள அங்கம்**

1.லகு 2.குரு 3.புலுதம் 4.காகபாதம் 5.துருதம்

**(⋯3⋯)**

தாளத்தின் ஆறு வகையான அங்கங்கள் -ஷடாங்கம்

- அனுதுருதம் -1
- துருதம் - 2
- லகு - 4
- குரு - 8
- புலுதம் - 12
- காகபாதம் - 16

பொருத்தமான விடையைத் தெரிவு செய்க


**6. மகுடஅடவுகளின் சொற்கட்டுக்கள் அமையும் யதி அமைப்பு**

1.சமயதி 2.கோபுச்சயதி 3.மிருதங்கயதி

4.டமருகயதி 5.ஸ்ரோதோவகயதி

(...5...)

சமயதி விஷமஜதி கோபுச்சயதி ஸ்ரோதோவகயதி டமருகயதி மிருதங்கயதி



பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

**7. நாட்டியசாஸ்திரத்தில் முத்திரைகள் பற்றி விளக்கப்பட்டுள்ள அத்தியாயம்**

1.4ஆவது 2.5ஆவது 3.6ஆவது 4.7ஆவது 5.9ஆவது

(⋯5..)

| | கூறப்பட்டுள்ள விடயம் |
|---|---|
| 1 ஆவது | நாட்டியம் தோன்றிய வரலாறு |
| 2 ஆவது | நாட்டிய அரங்கு பற்றிய விளக்கம் |
| 4 ஆவது | சிவனின் தாண்டவங்கள்,108 கரணங்கள் |
| 5 ஆவது | நாட்டியம் நிகழ முன் அரங்கில் செய்யவேண்டியவை |
| 6 ஆவது | எண்வகை ரஸங்கள் |
| 7 ஆவது | பாவங்கள்(பாவம்,விபஅத்தியாயம்<br>ாவம்,அனுபாவம்,வியபிசாரிபாவம்) |
| 8 ஆவது | 4 வகை அபிநயங்கள், சிரோ,திருஸ்டி,பேதங்கள் |
| 9 ஆவது | அஸம்யுத,சம்யுத ஹஸ்தங்கள் |
| 10-12 ஆவது | சரீரஅபிநயம், சாரிபேதம்,மண்டலபேதம் |
| 13 ஆவது | கதாபாத்திரங்கள,பறவைகள் விலங்குகளுக்குரிய நடைகள் பற்றியவை |
| 23 ஆவது | ஆஹார்யஅபிநயம் |
| 28-33ஆவது | இசை,பண்,தாளம்,தாளஜதிகள் |
| 34 ஆவது | தாளக்கருவிகள் |

பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

**8. "புருகு" எனும் மரத்தாலான ஆபரணங்கள் பயன்படுத்தப்படும் சாஸ்திரியநடனம்**

1.குச்சுப்புடி 2.கதகளி 3.மணிப்புரி 4.கதக் 5.மோகினியாட்டம்

(…1…)

**சாஸ்திரிய நடனங்களுக்கு அணியப்படும் அணிகலன்கள்**

- குச்சுப்புடி - 32வகையான ஆபரணங்கள் மரத்தினால்
- செய்யப்பட்ட இலேசான அணிகலன்கள்
- கதகளி - கிரீடம், புஜகீர்த்தி
- கதக் - அதிக அலங்காரம் இல்லை 100சலங்கைகள் கோர்க்கப்பட்ட பட்டையான வார்க்கச்சை காலில்
- மணிப்புரி - சாதாரண அணிகலன்கள்,சிறுமணிகள் கண்ணாடிகள்
- பதிக்கப்பட்ட ஆடைகள்
- மோகினியாட்டம்- நடனத்திற்கான சகல அணிகலன்கள்
- ஒடிசி - பூவேலைப்பாடு கொண்ட தங்கநகைகளும், வெள்ளி ஆபரணங்களும்,கொண்டை தலையணி கிரீடம் ,இடையில் சலங்கை

பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

**9. இன்றைய மோகினியாட்ட நடனக் கிரமத்தை தொகுக்கக் காரணகர்த்தாவாக அமைந்தவர்**

1.தஞ்சைநால்வர் 2.சுவாதித்திருநாள்மகாராஜா
3.வள்ளல்தோல்நாராயணமேனன் 4.கல்யாணிஅம்மா 5.ராகினிதேவி

(⋯2⋯)

**மோகினியாட்டத்தின் வளர்ச்சியில் பங்காற்றியோர்**

- தஞ்சைநால்வரின் பங்களிப்புடன் சிறப்பு பெற்றது
- சுவாதித்திருநாள்மகாராஜாவின் முயற்சியே முக்கியகாரணம்
- வள்ளல்தோல்நாராயணமேனன் கேரள கலாமண்டலத்தை உருவாக்கியவர் இக்கலையை ஆதரித்தார்
- கல்யாணிஅம்மா கேரளகலாமண்டலத்தில் மோகினியாட்ட ஆசிரியர்
- ராகினிதேவி,தங்கமணி முதலில் அங்கு பயின்ற மாணவியர்

-

பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

**10. ஒடிசிநடன அரசவை நர்த்தகிகள்**

1.தளிர்சேரிப்பெண்டிர் 2.தளியிலார் 3.பதியிலார்

4.பீதர்காலநியர் 5.பாஹர்காவன்யர்

.

**(…5…)**

- தளிர்சேரிப்பெண்டிர் - சோழர் காலத்தில் வழங்கப்பட்ட பெயர்
- தளியிலார் - சோழர் காலத்தில் வழங்கப்பட்ட பெயர்
- பதியிலார் - சோழர் காலத்தில் வழங்கப்பட்ட பெயர்
- பீதர்காலநியர் - ஒடிசிநடன ஆலய நர்த்தகிகள்
- பாஹர்காலன்யர் - ஒடிசிநடன அரசவை நர்த்தகிகள்

பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

**11. “தரண”எனும் கதக் நடன உருப்படியை ஒத்த பரத உருப்படி**

1.அலாரிப்பு 2.வர்ணம் 3.சப்தம் 4.தில்லானா 5.பதம்

**(⋯4⋯)**

**கதக், பரதநாட்டிய ஒற்றுமைகள்**

- பாவ,ராக,தாளம் தழுவிய ஆடல்
- நிகழ்ச்சி நிருத்தத்துடன் ஆரம்பமாகும்
- ஹஸ்தாபிநயங்கள்,பாவங்கள்,சஞ்சாரி பாவங்கள்
- சில தோராக்களின் சொல்கட்டுகள்
- அடவுகள் போல பரன்கள் கற்றல்
- தில்லானா போன்ற தரண எனும் உருப்படி
- நிருத்தம்,நிருத்தியம்,நாட்டியம் என்ற பகுப்பு

பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

**12. நடபாலா எனப்படும் நடனமுறை இடம்பெறும் சாஸ்திரியநடனம்**

1.கதக் 2.மணிப்புரி 3.ஒடிசி 4.மோகினியாட்டம் 5.பரதம்

**(···2···)**

**நடனபாலா என்பது**

- மணிப்பூரிலே அரசர் சத்தியகீர்த்தி காலத்தில் உருவாகிய புதுவகையான சங்கீர்த்தன முறை(நன்கு அமைக்கப்பட்ட நடனக்கோர்வை)
- இதில் மென்மையும் அழகும் தரும் பகுதிகளும்,வேகமும் எழுச்சியும் கொண்ட தாண்டவப்பகுதிகளும் உள்ளன.

பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

**13. மிஸ்ரஅலாரிப்பில் "திதிதெய்" எனும் செயற்பாட்டின் மொத்தஎண்ணிக்கை**

1. 6 2. 9 3. 10 4. 12 5. 14

(…2…)

தகிட = த க தி மி

திதிதெய், = திதிதெய் திதிதெய்

திதிதெய், = திதிதெய் திதிதெய்

திதிதெய், = திதிதெய் திதிதெய்

பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

**14. கங்கமுத்துநட்டுவனாரால் இயற்றப்பட்ட உருப்படி**

1.கௌத்துவம் 2.ஜதிஸ்வரம் 3.பதம் 4.பதவர்ணம் 5.தில்லானா

**(⋯1⋯)**

**கற்ற உருப்படிகளின் சாஹித்தியகர்த்தாக்கள்**

கௌத்துவம் - கங்கைமுத்துநட்டுவனார்

ஜதிஸ்வரம் - தஞ்சைநால்வர்

பதம் - மஹாவித்துவான் வீரமணிஐயர்

பதவர்ணம் - ஆனந்தபைரவி – தஞ்சை சிவானந்தம்

- பூர்விகல்யாணி – K.N.தண்டாயுதபாணிப்பிள்ளை

தில்லானா - பிலஹரி – டைகர் வரதாச்சாரியார்

- ஹமீர்கல்யாணி - மஹாவித்துவான் வீரமணிஐயர்

பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

**15. உத்தராங்க மேளகர்த்தாச் சக்கரங்களின் இலக்கங்கள்**

1. 1-6 வரை 2. 7-12 வரை 3. 8-12 வரை
4. 2-6வரை 5. 4-8 வரை

**(…2…)**

மேளகர்த்தாச் சக்கரங்கள் 12

.

| | பூர்வாங்கம் | | உத்தராங்கம் |
|---|---|---|---|
| இல 1 | சக்கரத்தின் பெயர் இந்து | இல 7 | சக்கரத்தின் பெயர் ரிஷி |
| 2 | நேத்ர | 8 | வஸு |
| 3 | அக்னி | 9 | பிரம்ம |
| 4 | வேத | 10 | திசி |
| 5 | பாண | 11 | ருத்ர |
| 6 | ருது | 12 | ஆதித்ய |

பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

16. **பின்வருவனவற்றில் விவாதிஸ்வரம்**

1.சுத்தரிஷபம்   2. சுத்தமத்திமம்   3. சுத்ததைவதம்

4. பிரதிமத்திமம்   5. சுத்தநிஷாதம்

**(···5···)**

| **ஸ்வரங்கள் 7** | **விவாதி(தோஷமுள்ள)** |
|---|---|
| **ஸட்ஜம் - ஸ** | |
| **ரிஷபம் - ரி - சுத்த ,சதுஸ்ருதி** | **ஷட்சுருதி** |
| **காந்தாரம் - க - சாதாரண ,அந்தர** | **சுத்த** |
| **மத்திமம் - ம - சுத்த ,பிரதி** | |
| **பஞ்சமம் - ப** | |
| **தைவதம் - த - சுத்த ,சதுஸ்ருதி** | **ஷட்சுருதி** |
| **நிஷாதம் - நி - கைசிகி ,காகலி** | **சுத்த** |

பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

**17. பெண்வேடம் தரித்து ஆடிய ஆண் நடனக்கலைஞர்**


1.ஈ.கிருஸ்ணையர்

2.வழுவூர்இராமையாபிள்ளை

3.மீனாட்சிசுந்தரம்பிள்ளை

4.அருணாசலநட்டுவனார்

5.சுப்பராயநட்டுவனார்





**(···1···)**

பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

**18. ஸ்ரீமதி.ருக்மணிஅருண்டேலின் அரங்கேற்றம் நடைபெற்ற ஆண்டு**

1.1925 2.1930 3.1935 4.1940 5.1945

**(…3…)**

**ஸ்ரீமதி.ருக்மணிஅருண்டேலின் வாழ்வில்…………..**

- 1904- 02.29 நீலகண்டசாஸ்திரிக்கும் ஷேஷம்மாளுக்கும் மகள்
- 1920- 16 வயதில் திருமணம் Dr.G.S அருண்டேல்
- 1926- ருஸ்யபலே அன்னாபவ்லோவின் சந்திப்பு பலேநடனம் கற்றமை
- 1932- தேவதாசி மரபினரின் நடனத்தை கண்டு ரசித்து கௌரிஅம்மாளிடம் பரதம் கற்கத்தொடங்கியமை
- 1935- அரங்கேற்றம்
- 1936-கலாஷேத்ரா ஆரம்பிகப்பட்டு முதலாவது கூட்டம்
- 1956- பத்மபூஷண் விருது 1957- முன்னணிநாட்டியமணி
- 1958- விக்ரோறியா மகாராணி வெள்ளிப்பதக்கம்
- 1960- அமெரிக்க பல்கலைக்கழகம் டாக்டர் பட்டம்
- 1968- பிராணிமித்ரா 1969- கௌரவகலாநிதிப்பட்டம்
- 1986- 02.24 இறையடி சேர்ந்தார்.

பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

**19. 1959இல் தமிழ்மொழியில் நாட்டிய நூல் ஒன்றினை எழுதியவர்**

1.ஸ்ரீமதி.ருக்மணிதேவி 2.ஸ்ரீமதி.கௌரிஅம்மாள்

3.ஸ்ரீமதி.பாலசரஸ்வதி 4.திரு.ஈ.கிருஸ்ணையர் 5.திரு.சுப்பராயர்

**(···3···)**

"பரதநாட்டியம்" என்னும் தமிழ்மொழியில் எழுதப்பட்ட நூல் Dr.இராகவனுடன் இணைந்து எழுதப்பட்டது.நாட்டியசெய்முறை நுணுக்கங்கள் பற்றி விளக்கப்பட்டுள்ளது.

பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

20. கண்டிய நடனம் ஆடப்படும் போது பயன்படும் பாதநிலையின் பெயர்

1.அரைமண்டி   2.முழுமண்டி   3.சமபாதநிலை

4.மண்டியநிலை   5.திரிபங்கநிலை

(···4···)




Figure 1. Basic positions of *Bharatanatyam*






பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

**21. கணவனிடமிருந்து கலகத்தால் பிரிந்திருக்கும் நாயகி**

1.விரஹோத்கண்டிதா 2.அபிசாரிகா 3.கலகாந்தரிதா
4.கண்டிதா 5.வாசகசஜ்ஜிதா

**(···3···)**

- **அஷ்டவிதநாயகிகள்**
- ஸ்வாதீனபதிகா-கணவனின் அன்பு எப்பொழுதும் கிடைக்கும்
- வாஸகஸஜ்ஜிதா-நாயகன் வருகைக்காக அலங்காரத்துடன் காத்திருப்பவள்
- விரஹோத்கண்டிதா-விரஹதாபத்துடன் நாயகன் வருகைக்கு ஏங்குபவள்
- விப்ரலப்தா-கணவனால் ஏமாற்றப்பட்டவள்
- கண்டிதா-கணவனைக் கண்டிப்பவள்
- கலகாந்தரிதா-கணவனிடமிருந்து கலகத்தால் பிரிந்திருப்பவள்
- ப்ரோஷிதப்ர்த்ருகா-தூரதேசம் சென்ற கணவனைப் பிரிந்து தனித்திருப்பவள்
- அபிசாரிகா-நாயகனைத் தேடிச் செல்பவள்

பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

**22. திருவாசகம் பாடப்படுகின்ற இராகம்**

1. நாட்டை    2. மோகனம்    3. மத்தியமாவதி

4. சங்கராபரணம்    5. பூபாளம்

**(···2···)**

- நாட்டை – கச்சேரி தொடக்கத்தில் பாட உகந்தது, அலாரிப்பு பாடப்படுவது
- மோகனம் - திருவாசகம் பாட உகந்தது
- மத்தியமாவதி – புராணம் பாடப்படுவது
- சங்கராபரணம் - வெண்பா பாட உகந்தது
- பூபாளம் - அதிகாலைப் பொழுதை சித்தரிக்க பாடப்படும்

பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

**23. பதவர்ணத்தில் பொதுவாக திரிகாலத்தீர்மானம் இடம்பெறுவது**

1. பல்லவி தொடக்கத்தில்
2. அனுபல்லவி தொடக்கத்தில்
3. சரணத்தின் தொடக்கத்தில்
4. பல்லவி முடிவில்
5. சரணத்தின் முடிவில்

**(···1···)**

- திரிகாலத்தீர்மானம் என்பது ஜதிச்சொற்கட்டுக்களை மூன்றுகாலங்களிலும் அமைத்து இறுதியில் துரிதகால முடிவுத்துண்டுடன் அமைக்கப்பட்ட கோர்வை

பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

**24. ஒருவரை ஒருவர் நேரில் காணாமல் காதலிப்பதைக் குறிக்கும் சிருங்காரப்பிரிவு**

1.அயோகசிருங்காரம் 2.விப்ரயோகசிருங்காரம்

3.விப்ரலம்பசிருங்காரம் 4.சம்போகசிருங்காரம் 5.அதிசிருங்காரம்

**(···1···)**

- **சிருங்காரப்பிரிவுகள்**
- அயோகசிருங்காரம்- ஒருவரை ஒருவர் முன்பு நேரில் காணாது காதலிப்பது. கனவிலோ,சகி மூலமோ நாயனைப் பற்றி அறிதல்
- விப்ரயோக/விப்ரலம்ப சிருங்காரம்-நாயகன் நாயகியரின் பிரிவினால் ஏற்படும் துயரம்
- சம்போக சிருங்காரம்- நாயகன்,நாயகி ஒருரை ஒருவர் புரிந்து கொண்டு இன்பமாக வாழ்தல்

பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

**25. இரஸஉணர்வின் பின் தொடர்ந்த வெளிப்பாடாக அமைந்த பாவம்**

1.ஆலம்பனவிபாவம் 2.உத்தீபனவிபாவம் 3.அனுபாவம்
4.வியபிசாரிபாவம் 5.சாத்வீகபாவம்

**(···3···)**

- விபாவம் -ரஸத்தை தோற்றுவிப்பதற்குக் காரணமாய் அமைந்தது.
- ஆலம்பனவிபாவம்- புறக்காரணிகள்
- உத்தீபனவிபாவம்- அகக்காரணிகள்
- அனுபாவம் -ரஸம் தோன்றிய பின் வெளிப்படும் நடை,உடை பாவனை
- சாத்வீகபாவம் - உள்ளத்து உணர்ச்சிகளின் மேலீட்டால் ஏற்படும் பாவம்
- வியபிசாரிபாவம்- ரஸ உற்பத்திக்கான துணைஉணர்ச்சிகள், நிலையற்றவை, தோன்றி மறையும்.
- ஸ்தாயிபாவம்- ரஸவெளிப்பாட்டில் தொடக்கம் முதல் இறுதிவரை நிலைத்து நிற்கும் பாவம்

பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

**26. அற்புதரஸத்தின் எதிர்ரஸம்**

1.சிருங்காரம் 2.ரௌத்ரம் 3.வீரம் 4.அற்புதம் 5.பீபத்ஸம்

**(···2···)**

| ரஸம் | எதிர்ரஸம் |
|---|---|
| சிருங்காரம் | பீபத்ஸம் |
| ஹாஸ்யம் | கருணா |
| ரௌத்திரம் | அற்புதம் |
| வீரம் | பயானகம் |

பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

**27. தானவீரனுக்கு உதாரணமாகத் திகழ்பவன்**

1.இராமன் 2.கிருஸ்ணர் 3.புத்தர் 4.கர்ணன் 5.இராவணன்

**(⋯4⋯)**

- **வீரரஸத்தின் பிரிவுகள்**
- தானவீரன் - சிபி , கர்ணன்
- தயாவீரன் - கௌதமபுத்தர்
- தர்மவீரன் - ஸ்ரீஇராமபிரான்

பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

**28. "மன்றுதொறும் நின்ற குரவை" என்ற மதுரைக் காஞ்சிப் பாடலுக்குரிய நிலம்**

1.குறிஞ்சி 2.முல்லை 3.மருதம் 4.நெய்தல் 5.பாலை

(···1···)

- **ஐவகை நிலங்கள்**
- குறிஞ்சி – மலை சார்ந்த பிரதேசம்
- முல்லை – காடு சார்ந்த பிரதேசம்
- மருதம் – வயல் சார்ந்த பிரதேசம்
- நெய்தல் – கடல் சார்ந்த பிரதேசம்
- பாலை – பாலைவனம் சார்ந்த பிரதேசம்

பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

**29. ஷேத்திரக்ஞரின் பதங்கள் பிறந்த காலப்பகுதியாக விளங்குவது**

1.சோழர்காலம் 2.விஜயநகரகாலம் 3.ஆங்கிலேயர்காலம்

4.பல்லவர்காலம் 5. நாயக்கர்காலம்

**(…5…)**

- சோழர்காலம் - தஞ்சைப்பெருங்கோயில் எழுந்தகாலம் கலைகளின் பொற்காலம்
- விஜயநகரகாலம் -கர்நாடகஇசை,நாட்டியம் அபிவிருத்தியடைந்தது,நவராத்திரி விழா
- ஆங்கிலேயர்காலம் - நாட்டியத்தின் இருண்டகாலம்
- பல்லவர்காலம் - நாயன்மார்,ஆழ்வார்களின் காலம் ,பக்திநெறிக்காலம்
- நாயக்கர்காலம் - பல இசை நடனஉருப்படிகள் புதுப்பெலிவு பெற்றதுடன் பதங்கள் பாவபதங்கள், அபிநயபதங்கள் என விளக்கப்பட்டுள்ளது.

பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

**30. பின்வரும் ஆண்டுகளில் நடனக்கலை மறுமலர்ச்சிக் காலத்தில் ஏற்பட்ட மாற்றங்களில் பொருத்தமற்றது.**

1.1910 -பொட்டுக்கட்டும் முறை உருவாக்கப்பட்டது.

2.1917 -சாந்திநிகேதனில் மணிப்புரி நடனம் அறிமுகமாகியது.

3.1830 -கேரளகலாமண்டலம் உருவாக்கப்பட்டது.

4.1926 -ஈ.கிருஸ்ணையர் பாரதியார் பாடலுக்கு நடனமாடியமை.

5.1922 -ரஸ்யபலே நடனக்கலைஞர் அன்னாபவ்லோவவின் இந்நிய விஜயம்

**(···1···)**

- பொட்டுக்கட்டும் முறை என்பது தேவதாஸிகளை கோயிலுக்கு அர்ப்பணித்தல்
- சுயமரியாதை இயக்கம் இம்முறையை எதிர்த்து சட்டம் உருவாக்கியது.

பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

**31. சோட உபசாரங்களில் 14ஆவது உபசாரமாக சமர்ப்பிக்கப்படுவது,**

1.தூபம் 2. தீபம் 3.மலர் 4. கீதவாத்தியம் 5.நிருத்தியம்

(…4…)

- ஆலயக்கிரியைகளில் ஓர் அங்கமான ஷோடசசோபசாரம் எனப்படும் 16 உபசாரங்களில் கீதவாத்தியம் 14 ஆவதாகவும் நிருத்தியோபசாரம் 15 ஆவதாகவும் இடம்பெறும் என ஆகமநூல்கள் குறிப்பிடுகின்றன.

பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

**32. சதுஸ்ரஜாதி ரூபகதாளத்தில் 6 ஆவர்த்தனங்களுக்கு கோர்வை அமைக்கும் போது உள்ளடக்கப்பட வேண்டிய மாத்திரைகளின் எண்ணிக்கை,**

1.24 2.36 3.48 4.96 5.144

**(···5···)**

$0$ $1_4$

; ; ; ; / ; ; ; ; ; ; ; ; //

ஒரு ஆவர்த்தனத்தில் 24 மாத்திரைகள்

6 ஆவர்த்தனங்களுக்கு 6x24= 144

பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

**33. 3 ஆவது தாதெய்தெய்த அடவில் இடம்பெறும் பாதபேதம்**

1.மோடிதம் 2.லுடிதம்லோலிதம் 3.குட்டணம்

4.சரணம் 5.வேகினி

**(⋯2⋯)**

- மோடிதம் - தத்தெய்தாம் 1ஆவது அடவின் இறுதிப்பகுதி
- லுடிதம்லோலிதம்- 3ஆவது தாதெய்தெய்த அடவு
- குட்டணம் - தெய்தெய்திதெய் அடவு
- சரணம் -L வடிவில் கால்வைத்து நகர்தல் தட்டுமெட்டடவின் நிலை
- வேகினி- நுனிக்காலில் ஓடுதல்

பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

**34. மறைத்தல் தொழிலைக் குறித்து நிற்கும் தாண்டவம்**

1.காளிகாதாண்டவம் 2.கௌரிதாண்டவம் 3.சங்காரதாண்டவம்

4.திரிபுரதாண்டவம் 5. ஊர்த்துவதாண்டவம்

**(⋯4⋯)**

- படைத்தல் - காளிகாதாண்டவம்
- இன்பக்காத்தல் - சந்தியாதாண்டவம்
- துன்பக்காத்தல் - கௌரிதாண்டவம்
- அழித்தல் - சம்ஹாரதாண்டவம்
- மறைத்தல் - திரிபுரதாண்டவம்
- அருளல் - ஊர்த்துவதாண்டவம்

பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

**35. "ஆணும் பெண்ணும் சேர்ந்தது இவ்வுலகு" என்பதனை உணர்த்தும் நடராஜ தத்துவ அமைப்பு**

1.சிலம்பும்கழலும் 2.திருவாசி 3.தோடும்குழையும்

4.தீஅகல் 5.குமிண்சிரிப்பு



**(···3···)**

- சிலம்பும்கழலும் -வினைகளை வென்று பிறப்பறுப்பது
- திருவாசி - ஒலிக்கும் ஒளிக்குமான தொடர்பினைக் குறிக்கிறது
- தோடும்குழையும் - ஆணொடு பெண்ணாய் அமைந்தது இவ்வுலகு
- தீஅகல் - உண்மை ஞானத்தை உணரச்செய்து பாசங்களை நீறாக்குதல்
- குமிண்சிரிப்பு – வினைகளைக் களைந்து அருள் கொடுப்பது

பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

**36. கிராமியக்காட்சி ஒன்றினைச் சித்தரித்துக் காட்டுவதற்கு ஏற்ற ஒலியமைப்புக் குறியீடு**

1.மணியோசை 2.மகுடிஓசை 3.ஆந்தைஅலறல்

4.பறவைகள்ஒலி 5.தெம்மாங்குஇசை

(..5⋯)

- மணியோசை – கோயில் சூழல்
- மகுடிஓசை - பாம்பு வருதல்
- ஆந்தைஅலறல் - சுடுகாடு
- பறவைகள்ஒலி - சுடுகாடு
- தெம்மாங்குஇசை – கிராமியச்சூழல்

பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

**37. உடலைச் சுழற்றி ஆடும் சப்பிரகமுவ நடனமரபு**

1.முல்மாத்ரய 2.சிந்துமாத்ரய 3.பட்டுதல்மாத்ரய
4.யக்பதமாத்ரய 5.யாதினிமாத்ரய

(…3…)

- **சப்பிரகமுவ நடனத்தின் 5 வகைகள்**
  - முல்மாத்ரய – நடனப்பயிற்சிக்காக ஆடப்படும் ஆரம்பப்பகுதிகள்
  - சிந்துமாத்ரய – கிராமியப்பெண்கள் பாடிய பாடல்களைக் கொண்டது.
  - பட்டுதல்மாத்ரய – இரு பாதங்களின் விரல்களில் ஆரம்பித்து முழுப்பாதங்களும் நிலத்தில் படும் வண்ணம் சுழன்று ஆடுதல் சாந்திக்கருமங்களில் ஆடப்படுவது
  - யக்பதமாத்ரய - பிசாசுகளுக்கு சாந்திக்கருமம்
  - யாதினிமாத்ரய – தெய்வங்களிடமிருந்து நன்மை பெறும் நோக்குடன் ஆடப்படுவது

பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

**38. வேளாண்மைத் தொழிலுடன் சம்பந்தப்பட்ட கூத்து**

1.மகிடிக்கூத்து 2.காமன்கூத்து 3.பறைமேளக்கூத்து

4.வசந்தன்கூத்து 5.சாக்கையர்கூத்து

**(⋯4⋯)**

- மகிடிக்கூத்து - மந்திர தந்திர விளையாட்டுக்களைக் கொண்டது
- காமன்கூத்து - காமன் சிவனை எரித்த கதை – மலையகப்பிரதேசம்
- பறைமேளக்கூத்து – பறை அடிக்கும் தொழில் செய்வோர் கோயிலுக்கு வெளி வீதிளில் ஆடும் கூத்து
- வசந்தன்கூத்து -விவசாயம் முடித்து ஓய்ந்திருக்கும் மக்களின் மனமகிழ்ச்சியை வெளிப்படுத்தும்
- சாக்கையர்கூத்து –கேரளாவில் ஆடப்பட்டு வரும் ஒரு வகைக்கூத்து கதைசொல்லும் முறையில் அமையும் 2 வகை பிரபந்தக்கூத்து,கூடியாட்டம்

பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

**39. 1998இல் இராமநாதன் நுண்கலைப்பீடத்தில் ஏற்படுத்தப்பட்ட மாற்றமாகக் கருதப்படுவது**

1. நுண்கலைமாணி கற்கைநெறி முன்மொழியப்பட்டது.
2. இசைத்துறை,நடனத்துறை இரண்டாகப் பிரிக்கப்பட்டது.
3. நுண்கலைமாணி கற்கைநெறி ஆரம்பிக்கப்பட்டது.
4. இசை,நடனத்துறைத் தலைவர்கள் நியமிக்கப்பட்டனர்
5. சித்திரமும் வடிவமைப்பும் கற்கைநெறி ஆரம்பிக்கப்பட்டது

**(…5…)**

- 1990-1991 இல் நுண்கலைமாணி முன்மொழியப்பட்டு ஆரம்பிக்கப்பட்டது.
- 1996 இல் இசை நடனத்துறைகள் பிரிக்கப்பட்டு தலைவர்கள் நியமிக்கப்பட்டனர்.
- 1998 இல் சித்திரமும் வடிவமைப்பும் கற்கைநெறி ஆரம்பிக்கப்பட்டது

பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

**40. திரு.ஏரம்பு.சுப்பையா அவர்கள் தாம் பிறந்தமண்ணிற்கு பெருமை தேடித்தந்தமையை கௌரவித்து வழங்கப்பட்ட பட்டம்**

1.கலைச்செல்வன் 2.கலைஞர் 3.அபிநயஅரசகேசரி
4.நடனவேந்தன் 5.அபிநயஅரசு

(···3···)



- பிரபல நடிகர் டி.கே சண்முகம் அவர்களால் "கலைஞர்" பட்டம்
- பிதேசகலை மன்றத்தின் கௌரவத்தின் பின் கலைச்செல்வியினால் "கலைச்செல்வன்"
- இணுவில் பரமானந்தா நூல்நிலையத்தின் பொங்கல்விழாவில் திரு.சபாஆனந்தரால் "அபிநயஅரசகேசரி"

பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

- **41 தொடக்கம் 45வரையான வினாக்களுக்கு பின்வரும் அட்டவணையைப் பயன்படுத்தி மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

| தாளம் | ஜாதி | கதி | அங்கஅடையாளம் | அட்சரஎண்ணிக்கை |
|---|---|---|---|---|
| .....A...... | திஸ்ரம் | கண்டம் | $1_3 0 1_3$ | 40 |
| ஜம்பைதாளம் | ....B.... | சங்கீர்ணம் | $1_4$U0 | 63 |
| அடதாளம் | கண்டம் | ...C.... | $1_5 1_5 00$ | 70 |
| துருவதாளம் | மிஸ்ரம் | திஸ்ரம் | ...D....... | 69 |
| ஏகதாளம் | சங்கீர்ணம் | மிஸ்ரம் | $1_9$ | ...E..... |

# 175 தாள விளக்கம்……..

- **அடிப்படையான தாளங்கள் 7 ஆகும்.**

1. துருவதாளம் - 1011
2. மட்டியதாளம் - 101
3. திரிபுடைதாளம்- 100
4. அடதாளம் - 1100
5. ரூபகதாளம் - 01
6. ஜம்பைதாளம் - 1U0
7. ஏகதாளம் - 1

**லகுவின் வகைகள்**

$1_3$ $1_4$ $1_5$ $1_7$ $1_9$

கதிகள்- நடை- தாளத்தின் வேகம்- ஒரு தட்டுக்கும் அடுத்த தட்டுக்குமான இடைவெளி

- திஸ்ரம் -3 தகிட
- சதுஸ்ரம் -4 தகதிமி
- கண்டம் - 5 தகதகிட
- மிஸ்ரம் - 7 தகிடதகதிமி
- சங்கீர்ணம் - 9 தகதிமிதகதகிட

| தாளம் | ஜாதி | கதி | அங்கஅடையாளம் | அட்சரஎண்ணிக்கை |
|---|---|---|---|---|
| மட்டியதாளம் | திஸ்ரம் | கண்டம் | $1_3 0 1_3$ | 40 |
| ஜம்பைதாளம் | சதுஸ்ரம் | சங்கீர்ணம் | $1_4$U0 | 63 |
| அடதாளம் | கண்டம் | கண்டம் | $1_5 1_5 00$ | 70 |
| துருவதாளம் | மிஸ்ரம் | திஸ்ரம் | $1_7 0 1_7 1_7$ | 69 |
| ஏகதாளம் | சங்கீர்ணம் | மிஸ்ரம் | $1_9$ | 63 |

பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

41. A இல் இடம்பெறவேண்டிய தாளம்,

1.ஏகதாளம் 2.ஜம்பைதாளம் 3.ரூபகதாளம்

4.மட்டியதாளம் 5.அடதாளம் (…4….)

42. B இல் இடம்பெறவேண்டிய ஜாதி,

1.திஸ்ரம் 2.சதுஸ்ரம் 3.கண்டம் 4.மிஸ்ரம் 5.சங்கீர்ணம்

(…2….)

43. C இல் இடம்பெறவேண்டிய கதி,

1.திஸ்ரம் 2.சதுஸ்ரம் 3.கண்டம் 4.மிஸ்ரம் 5.சங்கீர்ணம்

(…3….)

44. D இல் இடம்பெறவேண்டிய அங்கஅடையாளம்,

1. $1_7 0 1_7 1_7$ 2. $0 1_7$ 3. $1_3 0 1_3 1_3$ 4. $1_7 1_7 0$ 5. $1_3 1_3 00$

(…1….)

45. E இல் இடம்பெறவேண்டிய அட்சரஎண்ணிக்கை,

1.27 2.36 3.45 4.63 5.81 (…4….)

பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

46. இப்படத்தில் காணப்படும் நாட்டியக்கலைஞர் ......................ஆவார்.



1.கலாநிதி. பத்மா சுப்ரமணியம்
2.ஸ்ரீமதி பாலசரஸ்வதி
3.ஸ்ரீமதி கௌரிஅம்மாள்
4.ஸ்ரீமதி லீலாம்பிகை செல்வராஜா
5.ஸ்ரீமதி ருக்மணிஅருண்டேல்

(…5….)

கௌரிஅம்மா



பாலசரஸ்வதி



பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

47. இப்படத்தில் இசைக்கப்படும் வாத்தியக்கருவி ………ஆகும்.


shutterstock.com • 1419033788

1. பறை
2. ரபான்
3. நையாண்டிமேளம்
4. தப்பு
5. மத்தளம்

(…3….)

தப்பு



பறை



மத்தளம்



பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

48. இப்படத்தில் ஆடப்படும் சாஸ்திரியநடனம் ………….ஆகும்.

1. மணிப்புரி
2. கதக்
3. குச்சுப்புடி
4. ஒடிசி
5. மோகினியாட்டம்



(…4….)

குச்சுபுடி மணிப்புரி கதகளி மோகினியாட்டம் கதக்







பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

49. இப்படத்தில் காட்டப்பட்டிருப்பது ············ வாத்தியத்தின் ஒரு பகுதி ஆகும்.



1. மிருதங்கம்
2. வயலின்
3. புல்லாங்குழல்
4. வீணை
5. கிற்றார்

(···4···.)



பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

50. இப்படத்தில் காணப்படும் அணிகலன் ············ஆகும்.

1. நெற்றிச்சுட்டி
2. அட்டியல்
3. பதக்கம்
4. ஒட்டியாணம்
5. கைவங்கி



(···4···.)

# நன்றி

